# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை - 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 88/மாநகராட்சி/2018**

**நாள் : 04/12/2018**

**திரு S.மரிய மைக்கேல்,**
**திருச்சிராப்பள்ளி – 620 007.. – முறையீட்டு மனுதாரர்**

**மாநகராட்சி ஆணையர்/**
**உதவி ஆணையாளர்/**
**மாநகராட்சிப் பொறியாளர்,**
**திருச்சிராப்பள்ளி மாவட்டம். – எதிர் மனுதாரர்**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, குண்டூர் எம்.ஐ.இ.டி, பாலன் நகர், அய்யனார் கோவில் எதிர்புறம், 4–379 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு S. மரியமைக்கேல் அவர்களின் 11.04.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.04.2018 அன்று பெறப்பட்டு 88/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரா மற்றும் அவரது சாட்சியாளா திரு அ. மைக்கேல் ஆகியோர் விசாரணையின்போது அளித்த வாக்குமூலங்கள் மற்றும் திருச்சிராப்பள்ளி பொன்மலைக்கோட்ட உதவி ஆணையாளா சமர்ப்பித்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, குண்டூர் எம்.ஐ.இ.டி, பாலன் நகர், அய்யனார் கோவில் எதிர்புறம், 4–379 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு S. மரியமைக்கேல் என்பவர் கீழ்க்காணும் புகார்களைத் தெரிவித்து நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-

(1) திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பொன்மலைக்கோட்டம், வார்டு எண்.37–இல் Sebco Property @ Morais City நிறுவனத்தினரால் அனுமதியில்லாமல் புறம்போக்கு நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள இராட்சத விளம்பரப் பலகைகள் மற்றும் முகப்புக் கோபுரங்களை அகற்ற ஆணையிடுதல் ;

(2) முறைகேடுகளுக்கு துணை போன மாநகராட்சி அலுவலர்கள் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுதல் ;

2. முறையீட்டு மனுதாரரிடம் 04.07.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டை பிரதான சாலை, கொட்டப்பட்டு கிராமத்தில் 3.86 ஏக்கர் நிலம் Sebco Property நிறுவனத்தினரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, அந்நிலத்தில் பிரமாண்டமான விளம்பரப் பலகைகள் மற்றும் நிரந்தர முகப்புக் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன என விசாரணையின்போது தெரிவித்தார். இவ்வாக்கிரமிப்பினால் மிகப்பெரிய விபத்துகள் ஏற்படும்

சூழல் உருவாகிறது என்றும் தெரிவித்தார். விளம்பரப்பலகைகள் தற்காலிகமாக மட்டும் அகற்றப்படுவதும் மீண்டும் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். மேலும், மேற்குறிப்பிட்ட நிறுவனத்திற்கு லாபம் தரும் நோக்கிலும், அரசுக்கு இழப்பு தரும் விதத்திலும் பொன்மலை கோட்ட மாநகராட்சி அதிகாரிகள் பணியாற்றுகிறார்கள் என்றும், ஆக்கிரமிப்புகளை அகற்றிவிட்டு வேலி அமைத்து 3.86 ஏக்கர் நிலத்தினை பொதுமக்களுக்கும் அரசு பயன்பாட்டிற்கும் உபயோகப்படுத்த கேட்டுக்கொண்டார்.

3. முறையீட்டு மனுதாரரின் சாட்சியாளர் திரு அ. மைக்கேல் அவர்களிடம் 04.07.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. மேற்குறிப்பிட்ட Morais City நிறுவனத்தினர் அரசு நிலத்தில் அனுமதியில்லாமல் விளம்பரப் பலகை அமைக்கப்பட்டது குறித்து தானும் திருச்சி மாநகராட்சிக்கு மனுச் செய்ததாகவும் விசாரணையின்போது தெரிவித்தார். விளம்பரப் பலகைகளை அகற்றக்கோரி திரு கன்சாம் என்பவருக்கு மாநகராட்சி கடிதம் எழுதியதையும் ஆனால் 04.07.2018 வரை விளம்பரப் பலகைகள் அகற்றப்படவில்லை என்றும் தெரிவித்தார். திருச்சி மாநகராட்சி முழுமையாக அரசின் நிலத்தில் உள்ள விளம்பரப்பலகை மற்றும் முகப்புக்கோபுரம், அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும், தனக்கு பதில் அளிக்கும்போது மாநகராட்சி அகற்றிய விளம்பர புகைப்பட நகல் அறிக்கை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

4. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து திருச்சிராப்பள்ளி, பொன்மலைக்கோட்டம் உதவி ஆணையாளரின் அறிக்கையும் பெறப்பட்டது. மொரைஸ் சிட்டி அமைந்துள்ள இடத்தை நோய்வு செய்ததில் அப்பகுதியில் மூன்று விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டதென்றும், அவற்றினை அகற்றக்கோரி மனைப்பிரிவு உரிமையாளருக்கு 15.11.2017 நாளிட்ட கடிதத்தில் அறிவிக்கை வழங்கியும் குறிப்பிடப்பட்ட காலக்கெடுவுக்குள் விளம்பரப் பலகைகள் அகற்றப்படாததால், மொரைஸ் சிட்டியின் முகப்புப் பகுதியில் இருந்த விளம்பரங்கள் 08.06.2018 அன்று மாநகராட்சிப் பணியாளர்களால் அகற்றப்பட்டன என 12.06.2018 நாளிட்ட கடிதம் எண்.3978/2018/எப் 1–இல் பொன்மலைக் கோட்ட உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். மேலும், மொரைஸ் சிட்டியின் பிரதான சாலையின் வடக்குப் பகுதியில் விளம்பரப் பலகை வைக்கப்பட்டுள்ள212/12 மற்றும் 225/1 புல எண்களிட்ட உள்ள தலா 1.24 ஏக்கர் நிலம் திரு பி. மன்மோகன் என்பவருக்கு சொந்தமானது என்று தெரிவித்து நில அளவை ஆவண நகல்களை பொன்மலைக்கோட்ட உதவி ஆணையாளர் சமர்ப்பித்துள்ளார். நில உரிமை ஆவணங்களின்படி, 226 புல எண்ணுள்ள நிலத்தின் பரப்பளவு 3.113 ஏக்கர் என்றும் இந்நிலம் மொரைஸ் சிட்டியின் பிரதான 80 அடி சாலைக்கு தென்புறத்தில் உள்ளது என்றும், விளம்பரப் பலகை அமைந்துள்ள இடம் மாநகராட்சிக்கு சொந்தமான நிலம் அல்ல என்றும், அந்நிலம் ரயத்துவாரி புன்செய் காலி நிலம், தோல்ஷாப் கழிவு நீர் வாய்க்கால் என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு அந்நிலத்தின் நில அளவை ஆவண நகலினையும் சமர்ப்பித்துள்ளார். மொரைஸ் சிட்டி மனைப்பிரிவு 19.01.2006 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை எண்.11–இன் படி வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளதென்றும், இவ்வாணையில் 10 சதவிகித பொது ஒதுக்கீட்டிற்கு சதுர அடிக்கு ரூ.1.50 வசூல் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது ஆனால் இம்மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடு மனை ஏதும் மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றும் பொன்மலைக்கோட்ட உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரரின் மனு, விசாரணையின்போது முறையீட்டு மனுதாரர் மற்றும் அவரது சாட்சியாளர் அளித்த வாக்குமூலங்கள், பொன்மலைக்கோட்ட உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் பிற ஆவணங்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன. மொரைஸ் சிட்டி மனைப்பிரிவின் முகப்புப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த விளம்பரங்கள் அனைத்தும் 08.06.2018 அன்று மாநகராட்சி பணியாளர்களால் அகற்றப்பட்டுள்ளன. புல எண்கள் 212/12 மற்றும் 225/1 தனியருக்குச் சொந்தமான நிலங்கள் என்றும், அந்நிலங்களில் அமைக்கப்பட்டுள்ள விளம்பரப்பலகைகளை மாநகராட்சியால் அகற்ற இயலாது. புல எண்.226 நில அளவை ஆவணங்கள் ரயத்துவாரி புன்செய் காலிநிலம், தோல்ஷாப் கழிவு நீர் வாய்க்கால் என வகைப்படுத்தப் பட்டுள்ளதால் அந்நிலமும் மாநகராட்சிக்கு சொந்தமானது அல்ல என அறிய முடிகிறது. எனவே, இந்நிலத்தில் அமைந்துள்ள விளம்பரப் பலகைகளை அந்நிலம் சம்பந்தப்பட்ட துறையினராலேயே அகற்றப்பட வேண்டும் மொரைஸ் சிட்டி மனை அமைப்பாளர் திருவாளர்கள். S. கன்சாம் மற்றும் J. S. லெரொன் மொரைஸ் ஆகிய இருவரும் கூட்டாக 18.05.2018 நாளிட்ட கடிதத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். மனுதாரர் திரு S. மரிய மைக்கேல் மற்றும் அவரது நண்பர் திரு அ. மைக்கேல் ஆகிய இருவருக்கும் சிறிய அளவிலான நிலங்கள் தங்களது

மனை அபிவிருத்தி பகுதிக்குள் உள்ளன என்றும் அந்நிலங்களுக்கான விலையை சந்தை விலைக்கும் பன்மடங்கு கூடுதலாக தங்களிடம் விற்க முயற்சி செய்து பலனளிக்காததால் அனைத்து அரசுத்துறைகளுக்கும் புகார் அளித்து தங்களை மிரட்டி நிறையப் பணம் பெற்றுவிடவேண்டும் என்ற தவறான எண்ணத்தில் குறுகிய மனப்பான்மையோடு தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர் என்று தெரிவித்துள்ளனர். முறையீட்டு மனுதாரர் மற்றும் அவரது சாட்சியாளர் ஆகிய இருவரும் குறுகிய நோக்கத்தில், கெட்ட எண்ணத்தில் அவர்களின் சுயநலத்திற்காக வேண்டுமென்றே தினந்தோறும் தங்களது மனைப்பிரிவு அமைப்பாளர்கள் மீது பெரிய அளவில் பணம் பறிக்கும் நோக்கோடு ஏதாவது ஒரு அரசு அலுவலகத்திற்கு புகார் அளிப்பதையே வாடிக்கையாக கொண்டுள்ளனர் என்று மொரைஸ் சிட்டி நலச்சங்கத்தின் தலைவர் திரு சி. சபாபதி அவர்களும் தனது 18.05.2018 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும், முறையீட்டு மனுதாரரின் செயல்பாடு குறித்து 28.02.2018 நாளிட்ட தினத்தந்தி நாளிதழில் வெளியான செய்தித் துணுக்கினையும் சமர்ப்பித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள விளம்பரப் பலகைகள் ஆக்கிரமிப்புகள் தனியார் நிலத்திலும், மாநகராட்சிக்கு சம்பந்தப்படாத பிற அரசுத் துறையின் நிலத்திலும் உள்ளதாகத் தெரியவருகிறது. எனவே, முறையீட்டு மனுதாரர் சம்பந்தப்பட்ட துறைக்கு முறையீடு செய்து கொள்வதே முறையாகும் என மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள், 4–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்

1. திரு S.மரிய மைக்கேல்,
எண். 4/379, அய்யனார் கோவில் எதிர்ப்புறம்,
பாலன் நகர், எம்.ஐ.இ.டி,
குண்டூர், திருச்சிராப்பள்ளி – 620 007.

2. மாநகராட்சி ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

3. உதவி ஆணையாளர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

4. மாநகராட்சிப் பொறியாளர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி